மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
காட்டுமன்னார்கோயில்
STC. 53 /2025
2026 ஆம் ஆண்டு  ஜீன் திங்கள் 10 ஆம் நாள் புதன்கிழமை

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேஷ்பாபு | ஊர் | : உடையார்குடி |
| தந்தை பெயர் | : தவமணி | வட்டம் | : காட்டுமன்னார்கோயில் |
| வயது | : 54 | மாவட்டம் | : கடலூர் |
| தொழில் | : | | |

**The Oaths Act 1969 (Act 44/1969)-**ன் விதிமுறைகளின் படி **10.06.2026** நாளாகிய இன்று திரு**.M. Sam Eugine Jebakumar, B.E.,B.L.,** காட்டுமன்னார்கோயில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

என்னுடைய வருமான வரி கணக்கு எண் என்னவென்றால் பார்த்து தான் கூற வேண்டும். எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் ஒப்புகை அட்டை என்று பெறப்பட்டது என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். நான் தாக்கல் செய்துள்ள புகாரில் அந்தோணி என்பவரை சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். எதிரி யார் முன்னிலையில் என்னிடம் காசோலை கொடுத்தார் என்றால் என் கடையில் வேலை பார்ப்பவர்கள் முன்னிலையில் கொடுத்தார். இந்த விபரத்தை எனது புகாரிலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை.

நான் எதிரியை என்று நேரில் பார்த்து பணம் கேட்டேன் என்றால் ஒரு வாரம் கழித்து கேட்டேன். எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரியிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் எதிரியிடம் இறுதியாக 27.01.2025 அன்று பணம் கேட்டதாக கூறியிருந்தால் அது பொய் என்றால் சரியல்ல. 27 ஆம் தேதி நான் எதிரியை எங்கு வைத்து பார்த்து பணம் கேட்டேன் என்றால் அவர் பள்ளிக்கு செல்லும் போது கேட்டேன். பழஞ்ச நல்லூரில் இளையபெருமாள் லேத்து பட்டறை அருகில் வைத்து கேட்டேன். எதிரியை ஒரு மாதமாக தான் தெரியும் என்று கூறியுள்ள நிலையில் நான் கொடுத்ததாக கூறும் பணத்திற்கு பிணயமாக வேறு ஆவணம் எதுவும் வாங்கினான் என்றால் இல்லை.

எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எத்தனை முறை அவரை சந்தித்தேன் என்றால் காலை பள்ளிக்கு செல்லும்போது கேட்டேன். மாலை கொடுப்பதாக சொல்லி கொடுத்தார். மேற்படி விபரத்தை எனது புகாரில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக கூறும் தேதியில் அவர் பள்ளிக்கு சென்று விட்டார் என்றாலும் அப்போது அவர் என்னிடம் பணம் பெற்று இருக்க வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல.

எதிரி என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், எதிரி வங்கியில் கடன் பெறுவதற்காக ஆவண கோப்புகளை நகல் எடுக்க எனது கடையில் கொடுத்து இருந்தார் என்றாலும் அதிலிருந்த காசோலையை நான் எடுத்து தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. காசோலை ஆவண கோப்பிலிருந்து தவறிய விபரம் இந்த வழக்கில் இருந்து அழைப்பானை வந்த பின்பு தான் எதிரிக்கு தெரியும் என்றாலும் அதன் காரணமாக தான் காசோலை தவறியவுடன் அவர் வங்கியில் புகார் அளித்து இந்த காசோலை வசூல் ஆவதை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்றாலும் சரியல்ல.

நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெறவில்லை என்றாலும் அவ்வாறு அறிவிப்பு சார்பாகிருந்தால் எதிரி அந்த அறிவிப்பிற்கு உரிய பதில் அறிவிப்பு கொடுத்திருப்பார் என்றாலும் சரியல்ல. தனக்கு ஏதேனும் பதிவு அஞ்சல் வந்தால் அதனை ஜோதி என்பவர் கையொப்பம் செய்து பெறலாம் என்று எதிரி அஞ்சல் துறைக்கு அனுமதி எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் காசோலைத் தொகை எதுவும் அளிக்கவில்லை என்றாலும் எதிரி வழக்கு காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த குற்ற செயலிலும் எதிரி ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.